நகுலேசுவர ஜனசமூக வெளியீடு - 1

# கீரிமலை வரலாறு

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
NO.

நகுலேசுவர ஜனசமூக வாசிகசாலை
காரியதரிசி
சிவ. திரு. பொ. கனகராஜா அவர்களால்
வெளியிடப்பட்டது.

★

யாழ்ப்பாணம்
விவேகானந்த அச்சகத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1952

[காபிரைட் செய்யப்பட்டது.]

நகுலேசுவர ஜனசமுக வெளியீடு - 1

உ

சிவமயம்

# கீரிமலை வரலாறு

நகுலேசுவர ஜனசமுக வாசிகசாலை
காரியதரிசி
சிவ. திரு. பொ. கனகராஜா அவர்களால்
வெளியிடப்பட்டது.

★

யாழ்ப்பாணம்
விவேகானந்த அச்சகத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1952

[காபிரைட் செய்யப்பட்டது.]

# பொருளடக்கம்.

1. நன்றியுரை
2. பதிப்புரை
3. இலங்கை ஓர் புண்ணியபூமி
4. நாகுலம் - நகுலம்
5. இடைக்காலம்
6. தற்காலம்

———0———

# நன்றியுரை

கீரிமலை வரலாறு என்ற இப்புத்தகம் வெளிவருமாறு பல புத்தக உதவிபுரிந்த நகுலேச்சுரம் — பிரம்மஸ்ரீ கு. நகுலேசுபரக் குருக்கள் அவர்களுக்கும், இவை இனிது முடியும் வண்ணம் தூண்டி முயற்சித்த இலங்கை, லிங்காயதகுரு சிவ. திரு. ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்களுக்கும், இதனை எழுதிப் பிழைதிருத்தி, உடனிருந்துதவி புரிந்த பண்டிதர் — சைவப் புலவர் — சிவ. திரு. இ. நவரத்தினம் ஆசிரியர் அவர்களுக்கும் எங்கள் நகுலேசுவர ஜன சமூக சங்கம் சிறந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

**பொ. கனகராஜா**
ஷை சங்கக் காரியதரிசி.

# பதிப்புரை

பழையகாலம் முதலாக நமது புண்ணியபூமி என்ற இலங்கையின் ஓர் பகுதியாகிய யாழ்ப்பாணத்தின் வடமேற்கே புண்ணியதீர்த்தம் அமைந்த நகுலாசலம் (கீரிமலை) நமது இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி இந்தியா வாழ் தமிழ்மக்களுக்கும் முக்கியதீர்த்தஸ்தலம் என்பது பலரும் அறிவர்.

மேற்படி ஸ்தலத்தின் பூர்வீக வரலாறுகள் ஒன்றும் தகுந்த ஆதாரமின்றிய பூர்வக் கதைகளாகவே "நகுலகிரிப் புராணம், நகுலகிரி மான்மியம், நகுலகிரிக் குறவஞ்சி" முதலிய நூல்கள் அச்சிடப்பட்டன. தழலில் விழுந்த நண்டு தழலையே கட்டிப்பிடிக்க வேண்டுவதுபோல மேற்படி நூல்களை, ஆதாரமாகவும், பழைய, தோம்புகள், நேர்முக ஆதாரங்கள், கர்ண பரம்பரைக் கதைகளையும் சேர்த்து "கீரிமலை வரலாறு" என முகநாமமிட்டு ஓர் நூலை வெளிப்படுத்தியிருக்கிறோம். இந்தச் சிறு நூலை வாசிக்குமன்பர்கள் இவற்றில் எவ்விதத் தவறுளவெனினும் அவற்றைப் பொறுத்து குணங்களைக் கொள்ளுமாறு தமியேன் அதிவிநய வந்தனப்பூர்வமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கடற்கரைப்பிள்ளையார் தலைமைப் பூசகரும்
உரிமையாளருமாகிய
த. செல்லையா.

# கீரிமலை வரலாறு

## இலங்கை ஓர் புண்ணிய பூமி.

பூர்வம் வாயு பகவானுக்கும், ஆதி சேஷனுக்கும் இடையே தத்தம் வலிமையைப் பரிசோதிக்கும் போட்டி ஒன்று நடைபெற்றது. "மேரு மலையின் பல சிகரங்களையும் ஆதிசேடன் தனது ஆயிரம் படங்களால் மறைப்ப வாயுபகவான் அவற்றுள் யாதானும் ஒன்றைப் பிடுங்கி எறிவது" என்பதே போட்டி நிபந்தனை. இதில் வென்ற வாயுதேவனாற் பிடுங்கி எறியப்பட்ட மேரு மலையின் மூன்று சிகரங்களும் தென் சமுத்திரத்தில் விழுந்தன. இவற்றுள் ஒன்றே இலங்கை. ஆதலின் இது தக்ஷிண கைலாயம் எனப்படும்.

இவ்விலங்கை கந்த புராண காலத்திலும் இருந்தது. சூரனது வீர மகேந்திரத்துக்குக் காவலாயுள்ள எட்டு நகரங்களுள் வட திசையிலிருந்த இலங்கையை ஆண்ட யாளிமுகனையும், மகனையும் தூதாகச் சென்ற வீரவாகுதேவர் வென்றார். இலங்கையைக் கடலுள் ஆழ்த்தி மிதக்கச் செய்தார் என்பது அந்நூல்.

சிறந்த சிவ பக்தனும், நாயன் மாரால் புகழ்ந்து தேவாரத்திலிடம் பெற்றவனும், இறைவனது இன்னருளும், வாளும், ஆயுளும் பெற்றவனும், மூவுலகுமாண்ட ஏக சக்கிராதிபதியும், சிவபூஜா துரந்தரனுமான இராவணன் இருந்து அரசு செய்த இடம் இவ்விலங்கையே யென்பது இராமாயணம்.

தேவர் அசுரராகிய இருபகுதியாரும் இறவாதிருந்து நெடுநாட் சண்டை செய்ய வேண்டி அமிர்தம் பெறத் திருப் பாற் கடலைக் கடைந்தனர். தோற்றிய அமிர்தத்தை அசுரர் பெறாது செய்த விஷ்ணுவின் வஞ்சனையை அறிந்த இரு அசுரரை அமிர்தம் உண்ணும் பொழுது காட்டிக் கொடுத்தனர் சூரிய சந்திரர். உண்ட அமிர்தம் கண்டத்தில் நிற்க விஷ்ணுவின் அகப்பையால் வெட்டப்பட்ட இரு அசுரரும் இறைவன் அருளால் கிரகங்களாகி ஆகாயத்தே தம்மைக் காட்டிக் கொடுத்த சூரிய சந்திரரைச் சமயம் வாய்க்குந்தோறும் மறைப்பர். இதனால் வருந்தும் சூரியன் (கதிர்) சிவபெருமான் சொற்படி முருகனை வேண்ட, அப்பெருமான் திருவருட்படி தென்னிலங்கையில் ஸ்கந்த நேவிய மலையின் மீது சுப்பிரமணியரது யந்திர ஸ்தாபனஞ் செய்து பன்னெடுங்காலம் புரிந்த தவப்பேற்றால் ஒளி குறையாது பிரகாசிக்க வரம் கிடைத்தது. இதனால் அம்மலை கதிரமலை-கதிர்காமம் என்றாயிற்று. அந்த யந்திரத்தைப் பற்றிக் கேள்வியுற்ற முத்துலிங்கச் சங்கமர் ஆங்குச் சென்று முருகன் அருள் பெற்று யந்திரத்தைத் தகட்டிலெழுதிப் பூஜித்து வரும்போது, தமது அங்கலிங்கைக்கிய காலமுணர்ந்து அவ்வியந்திரத்தகட்டைச் சிறு பெட்டி யொன்றனுட் சேமித்துச் சமாதியாயினர். அந்த யந்திரப் பெட்டியே இன்றும் உற்சவகாலத்தே யானைமீது எழுந்தருளக் காண்கிறோம். மற்றைய மலைமேலுள்ள யந்திர சக்தியையே பழமை தொட்டு முருகனுத்தரவுடன் பலையேறி வணங்கி வருகின்றனர். ஆயின் ஆண்டுற்ற யந்திரத்தைக் கண்ணுற்றார் ஒருவரில்லை.

இலங்கையின் முதற் சிங்கள அரசன்-விஜயன் சைவ சமயத்தவனாதலின் இலங்கைக்குக் காவலாக நான்கு திசைகளினும் நான்கு சிவாலயங்கள் எடுப்பித்தான். அவையா

வன : வடக்கே திருத்தம்பலேச்சுரம்; தெற்கே தெய்வந் துறைச் சந்திரசேகரானலயம்; கிழக்கே திருக்கோணேச்சுரம்; மேற்கே திருக்கேதீச்சுரப் புனர்நிர்மாணம்; மத்தியில் கதிர்காமமும் இவனது பணியே.

காசி சோமேசலிங்கத்துதித்து விபூதி, ருத்திராட்சம், சிவலிங்கம், காசாயம், ஜடாமுடி தாரணரான திரு. இரேணுக சிவாசாரியர் இலங்கை வீபீடணனுற் தரப்பட்டு 3 கோடி லிங்கப் பிரதிட்டை பண்ணிய விசேடம், கேது பூசித்த கேதீச்சுரமும், இராமர் பூசித்த முன்னீச்சுரமும் இலங்கையிலுள்ளனவே நாயன்மாரால் தேவாரப் பாடல் பெற்ற கோணேச்சுரம்-கேதீச்சுரமும், திருப்புகழ் பெற்ற கதிர்காமமும் இருக்கும் இலங்கையைப் புண்ணிய பூமி என்று சொல்வதற்கு யாதும் ஐயமில்லை. "வீர சைவாசாரியர் ஆகிய மாணிக்கவாசக" ராலும் புகழப்பட்ட இராவணனது கோட்டை மட்டக்களப்புத் திருக்கோயிலுக்கருகே யுள்ள கடலுள் இன்னுந் தோன்றுமென்றால் இலங்கைக்கு இணை இலங்கையே.

இலங்கையிற்பல ஆறுகள் கங்கை யென்னும் பெயருடன் வற்றாத நீரூற்றுக்களாய்ப் பாய்கின்றன. ஆகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றாலும் புகழ்பெற்ற எமதிலங்கை ஓர் புண்ணிய பூமியேயாகும்.

---

சித்தாந்த சிகாமணி, திருக்கரசைப்புராணமும் கூறும்.

பல்லாவரம் திரு. வேதாசலம் அவர்கள் "மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்" கூறும்.

# " நாகுலம் – நகுலம் "

முன்னரே கூறப்பட்ட சிறப்புக்களையுடைய ஈழத்திலங்கையின் வடக்குப் பாகத்தே இருக்கும் யாழ்ப்பாணக் குடாநாடு பண்டைக் காலத்தே நாகதுவீபம் என வழங்கப்பட்டது. ஏனெனில் : இங்கே நாக வழிபாடு செய்யும் நாகரீகமிக்க நாகர் என்னும் சாதியார் வசித்தமையேயாகும்.

இந்நாகதுவீபத்தின் வடதிசையில் கடற்கரையோரமாகத் தற்போது "கீரிமலை" என வழங்கப்பெறும் சிறந்த ஓர் புண்ணிய ஸ்தலம் இருக்கிறது ; தற்போதைய யாழ்ப்பாண நகரத்திலிருந்து சுமார் 11 மைல் வடக்கேயும், காங்கேசன்துறைப் புகையிரத ஸ்தானத்திலிருந்து 2 மைல் மேற்கேயும், பலாலி-ஆகாய விமான நிலையத்திலிருந்து சுமார் 6 மைல் மேற்கேயும் இருக்கிறது. இவ்வூரின் வடக்கே கடலும், கிழக்கே காங்கேசன்துறை மாவிட்டபுரமும், தெற்கே கருகம்பனையும், மேற்கே இளவாலையும் எல்லைக் கிராமங்களாய் அமைந்துள்ளன. இதன் நிலமட்டம் மற்றைய கிராமங்களிலும் சிறிதுயர்ந்துள்ளது. கடற்கரை முருகைக்கற் பூச்சிகளினால் உண்டாகும் கற்பாறைகளினால் அமைந்துள்ளது கடல் வற்றியிருக்கும் போது அதன் கரைநிலத்தைப் பார்த்தால் அடிமட்டம் அம் முருகைக்கற் பாறைகளாகவே காணப்படும். ஆதலின் கீரிமலைக் கடற்கரையிலிருந்து சிறிது தூரம் உண்ணூடும் அடி நிலம் முருகைக் கற்பாறைகளாயும், மேலே மணலும் மண்ணும் கலந்த நிலமாயும் இருக்கிறது. ஆகவேதான் இந்நிலத்திலிருந்து சில நீரூற்றுக்கள் ஊற்றெடுத்துச் சென்று கடலுடன் கலக்கின்றன.

இவ்வருவிகளுட் பல கோடைகாலத்திற் சுரப்பதில்லை. ஒரு சில அருவிகள் வருடமுழுவதும் பெருக்கெடுத்துப் பாய்கின்றன. பிரதானமான அருவிகள் சில கடலுட் பாய்வதன்முன் தேங்கி நிற்பதற்காக இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன் யாரோ ஒரு புண்ணியவானால் ஒரு குளம் கட்டப்பட்டது. பெண்கள் ஸ்நானம் செய்வதற்காக நாற்புறமும் மதில் சூழ்ந்த வேறோரருவிக்குளமும் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்விரு குளங்களில் வருடம் முழுவதும் அருவிநீர் தேங்கி நின்று மதகுவழியாகக் கடலுட் பாய்ந்து கொண்டே இருக்கும். கடற் பெருக்கு நேரங்களில் கடல் நீர் இக்குளங்களுட் பாய்ந்து சில மணி நேரங்களில் வடிந்து விடும். இக் குளங்களின் பாதுகாப்பு இப்போது தெல்லிப்பளைக் கிராமச் சங்கப் பொறுப்பில் உள்ளது. அவர்கள் இதனைப் பாதுகாப்பதற்கென ஓர் காவலாளியையும் நியமித்துளர்.

இவ் வருவிகள் பண்டைக்காலந் தொட்டே புண்ணிய தீர்த்தமாய் மதிக்கப்பட்டு வருகிறது. கீரிமலைக்கும் நாகுலம்-நகுலம்-நகுலகிரி-நகுலேச்சுரம், திருத்தம்பலேச்சுரம் எனப் பலபெயர்கள் வழங்கப்பட்டுள. இவற்றின் பண்டைய வரலாற்றுட் சிலவற்றைத் தொகுத்து ஈண்டுத்தருதும்.

## I

நாகதுவீபத்தின் சிறந்த புண்ணிய தீர்த்த ஸ்தலமாய் விளங்கியமையாலும், ஈண்டு நாக சாதியார் வசித்தமையாலும் இதற்கு நாகுலம் என்ற பெயருண்டாயிற்று. "நாகுலம் நாம சம்சுத்தம் அஸ்தி சதானம் மகிதலே" என்று சூத சம்ஹிதையில் உள்ள சுலோகப்படி நாகுலம் என்றுள்ள பெயர்

நகுலம் என மருவியது. மேற்படி சுலோகத்திலிருந்து சூதசம்ஹிதையில் கீரிமலையைப் பற்றிக் கூறியுள்ளமை நன்கு விளங்கும்.

யாழ்ப்பாணத்தில் வசித்தவர் நாகரேயெனப் பாரதத்திலும் கூறப்பட்டுள்ளது. எப்படியெனில்: அர்ச்சுனன் தீர்த்த யாத்திரைக்காகப் புறப்பட்டு வந்து, கடல் கடந்து நாகலோகமடைந்து நாகராசன் புதல்வியை (நாககன்னிகையை) மணந்து அராவானைப் பெற்று இங்குள்ள தீர்த்தத்திலும் ஆடிச் சென்றானென்பது.

சோழவரசனொருவன் தன் நாட்டுக்குக் கிழக்கேயுள்ள நாக நாடு சென்று, ஆங்குள்ள அரசனை வென்று, 'பீலிவளை' எனும் மாதை வேட்டுப் புத்திரனைப் பெறுவதற்கிடையே சோழ நாடு செல்ல வேண்டியிருந்தமையின், தன் மகனுக்குத் தொண்டைக் கொடியை அடையாளமாக அணிந்து, ஆங்குவரும் கப்பல்களில் அனுப்பும்படி கூறிச்செல்ல, அவ்வாறனுப்பப்பட்ட மகனிலிருந்தே பல்லவ வம்சம் உண்டாகிச் சோழநாட்டினொரு பகுதியாய் வடக்கேயுள்ள தொண்டை நாட்டைக் "காஞ்சி" யிலிருந்தரசாண்டதாகப் பெரும்பாணாற்றுப்படை' முதலிய தமிழ் நூல்கள் கூறும்.

இலங்கைக்கு வான் வழி வந்த புத்தபகவான் இடையே 'நாக நாட்டிலுந்தங்கி நாகவரசரிருவர் பிணக்கை நீக்கித் தமது பீடிகையை வணங்கச் செய்தாரென 'மணிமேகலை' நூல் கூறும். எவ்வாறாயினும் நாகர் இங்கே வசித்தனரெனு முண்மைக்குத் தற்போதும் சில சான்றுகளுள. பருத்தித்துறைக்குக் கிழக்குப் பக்கமாய் 'நாகர் கோயில்' எனும் பெயருடனுள்ள ஊரும், இங்குள்ளார் அதிகமாக நாக வழிபாடுடையராய் இருத்தலும் அச்சான்றுகளுட் சிலவாம்.

## II

பிருகுமுனிவர் கோத்திரரான இருசுஷீகனுக்கும், க்ஷாதி அரசன் மகள் சத்தியவதிக்கும் பிறந்த ஜமதக்கினிமுனிவர் தகப்பனுடைய சிரார்த்தத்தைச் செய்வதற்குத் தங்கள் குலகுருவாகிய பிருகு முனிவரைக் கேட்டுக் கொண்டார்; இருஷியும் உத்தரவிட்டார். அச்சிரார்த்த தினத்தன்று எதிர்பாராத விதமாக வியாசரும் ஜமதக்கினி வீட்டுக்கு வந்தார். வியாசர் உயர்குருவாகலின் சிரார்த்த குருவாக யாரை வைப்பதென்ற யோசனையில் இருந்தார். பிருகு ரிஷியும் அழைப்புவரக் காலம் தாமதிப்பதை யுணர்ந்து, கீரிவடிவில் ஜமதக்கினி மனையிற் சென்று விபரமறிந்து, மடைப்பள்ளியுட் புகுந்து, பிதிரர்கட்குரிய காமதேனுவின்பாலை நஞ்சூட்டி எச்சிற்படுத்திச்சென்றார். அத்தருணம் பிதிரர் வந்துபார்த்து தங்களுக்கு மரியாதை செய்யாமையாலும், பசிக்குணவு கிடைக்குமென்று வந்தும் உணவு எச்சிற் படுத்தப்பட்டமையாலும் கோபங் கொண்டு 'உன்குலமில்லாமற் போகக் கடவது' என்று சாபமிட்டுச்சென்றனர். இது யாரால் உண்டாயதென்பதையறிந்து, ஜமதக்கினி பிருகு முனிவரிடஞ் சென்றார். அவர் வருவதை அறிந்த குருவானவர், தன்னை ஏமாற்றிய காரணத்துக்காக 'கீரிமுகமுடையவனாய் அலைவாய்' எனச் சபித்தார். அதைப் பெற்றுக் கொண்ட ஜமதக்கினி குருவை வணங்கிச் சாப விடுதலை கேட்டார்.

---

மகாபாரதம் அஸ்வமேதபர்வணி 92 அத்தியாயம், 77, 78 பக்கம் "நகுலரூபேண சிரசாகாம்சநேநவை பிராஹமாநுஷவத்வாசமேதத் பிருஷ்டோவதஸ்வமே" 39-சிராத்தம் ஸங்கல்ப்பயாமாஸ ஜமதக்நிபுராகில 41 - பித்திறுணுமபிசம் காச்ச நகுலத்வ முபாகத 49 ஸதாங் பிரஸாத யாமாஸா சாபஸ்யாம் தோப வேதிதி 50.

இலங்கையின் வடபால் திருத்தம்பலேச்சுரம் என்றொரு ஸ்தலமுண்டு. அதனருகே சமுத்திரக்கரையில் கற்பாறைகளிலிருந்து பெருகிவந்து சங்கமமாகும் அந்தர் வாவியில் ஸ்நானம் பண்ணி சிவபூஜை செய்யின் தீரும்" ' என்று பிருகு ரிஷியும் சாப விமோசனம் அளித்தார். கிரி என்பதற்கு 'நகுலம்' எனவும் ஒரு பெயருண்டு. நகுலம் எனுஞ் சொல் ந-குலம் எனப் பிரிக்கப்பட்டு, குலமின்மை எனும் கருத்துந் தரும். ஆதலின் பிதிர் சாபம், குருசாபம் இரண்டும் பெற்ற ஜமதக்கினி, நாகதுவீபத்துத் திருத்தம்பலேச்சுரம் வந்து அவ்வாறே செய்து சாப நிவிர்த்தி பெற்றார். நகுலம் மாறிய தன்மையால் இத்திருத்தம்பலேச்சுரத்துக்கு நகுலாசலம், நகுலகிரி, நகுலேச்சுரம் என்னும் பெயர்களுண்டாயின பிதிர் சாபம் மாற்றிய இடமாதலின் இன்றும் சைவ சமயிகள் பலர் ஆங்குச் சென்று அந்தியேட்டி முதலிய பிதிர்க்கடன்களை இயற்றுவது கண்கூடு. அயோத்தி முதலிய பாரத நாட்டுச் சப்த சிரார்த்த ஸ்தலங்களைப்போல் இலங்கைவாழ் இந்து சமயத்தாருக்கு இந்நகுலேச்சுரம் ஓர் திவ்விய ஸ்தலமாகும். பிதிர்கட்குச் சிறந்த ஆடி அமாவாசைத்தினம் இங்கு மிகச் சிறப்புடையதாய் இந்து சமயத்தவர் எல்லோரும் வந்து தீர்த்தமாடிக் கொண்டாடப்படுகிறது.

## III

மேருமலையின் இடப்பாகச் சாரலில் தீர்த்தராசப் பெயருடைய ஸ்தலத்திலே பெருமையுடைய சுதாமா என்னும் நாமங்கொண்ட ஓர் முனிவர் மகா தவத்தைச்செய்தார். அங்கே மிக்க துணிவுள்ள துர்த்தரன் என்னும் வேடனொரு

---

**மத்ஸ்ய புராணம் 22 அத்தியாயம் 31 பக்கம்.**
**"நகுலேசுவரஸ்ய தீர்த்தச்சகிர்ய்ய மாலாம் ஆதைவச"**
**"யதாபூர்வ வதந்தியும் நகுலமலை மான்மியமும்"**

வன் அதிக களைப்பாக வந்து மரத்தில் ஏறி நித்திரை செய்தான். அங்ஙனம் உறங்கும்போது அவனுடைய முகத்திலிருந்து வாய்நீர்த் துளியானது சுதாமா முனிவருடைய புருவங்களின் நடுவே விழுந்தது. உடனே அம்முனிவருக்குக் கோபமுண்டாயது; எங்கும் பார்த்தார். அம்முனிவருடைய கண்களுக்குத் தூர்த்தரன் தெரிந்திலன். அச்சமயத்தில் ஒரு கீரி ஓடிவந்து மரத்திலிருக்கும் வேடன் தவறு செய்ததாகக் கூறியது. முனிவர் அக்கீரியின் முகம் மனித முகமாகவும், வேடன் முகம் கீரிமுகமாகவும் மாற்றிவிட்டார். வேடன் தான் தெரியாமற் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி பரிந்து வேண்டினன். முனிவர் வேடனைப்பார்த்து 'வேடனே நீ முன் புழுவாய்ப் பிறந்திருக்கும் பொழுது நாகுலத்துச் சிவபக்தனைக் கண்டகாகத்தின் நிழல் உன் உடம்பிற்பட்டது. அப்புண்ணியத்தால் இப்பிறவியில் வேடனாயினை. ஆனபடியால் இப்போதும் நீ அந்த நாகுலத்துச் சிவபெருமானையே சரணடை. அந்த ஸ்தலம் வேதாரணியத்தின் தெற்கே மூன்று யோசனை தூரத்தில் உள்ளது. அங்கேயுள்ள நன்னீராடித் தவஞ்செய். அப்போது நீ மனித முகத்துடன் பாவசாந்தி யடைந்து சிவபதம் பெறுவாய்' என்றார். வேடன் மரக்கலமேறி நாகுலத்தை அடைந்தான். அங்கே விஜயனாற் கட்டப்பட்ட திருத்தம்பலேச்சுரச் சிவாலயத்தில் வழிபாடாற்றி, ஒரு குகையுளிருந்து தவஞ்செய்தான். அங்கே கடலுடன் சங்கமமாகும் அருவியில் ஸ்நானமுஞ் செய்தான். சாபம் மாறியது. இதனாலும் நகுலேச்சுரம் எனப் பெயர் வந்திருக்கலாம்.

இப்போது பழைய சிவாலயம் இல்லை. அது பறங்கியரால் இடிக்கப்பட்டது. சில அடையாளங்கள் மாத்திரம் தென்படுகின்றன. தற்போது அக்காலத்துள்ள பன்னீர்

மரமும், கல்லாலும் காட்சி அளித்துச் சாட்சி பகருகின்றன. வேடன் நகுல முனியாயிருந்து தவஞ்செய்த குகை கோடை காலத்தில் மண்ணாலே மூடப்படுகின்றது. மாரிகாலத்திலே நீர் பெருகி வருகின்றது. கடற்கரையிலுள்ள பிள்ளையார் கோயில் பண்டைநாளில், இப்போதமைந்த பெண்கள் கேணிக்குத் தெற்கே பெரிய அரசமரத்தின் கீழிருந்தது. அதற் கடையாளமாக அவ்விடத்தே பழைய கோவிலின் அஸ்திபாரமுமிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுளது.

## IV

கி. பி. 785-ல் கதிரமலையில் இருந்தரசாண்ட உக்கிரசிங்கன் காலத்திலே மாருதப்புரவீக வல்லி (இவளைக் கனகாங்கியின் மகளென்றும் சோழவரசன் குமாரத்தி எனவுங் கூறுவர்) என்பாள் சிறு பருவத்தே பாம்புக் கடியினால் வரப்பட்ட மாசுட்டம் (சரீரம் முழுவதும் பெரும் புண் இதனைக் குதிரை முகமெனவுஞ் சிலர் கூறுப) சோதிடராற் கன்மநோய் எனவும் மாறாது எனவும் கூறப்பட தீர்த்த ஸ்நானம் செய்யப் புறப்பட்டாள். கங்கை முதலிய பாரத நாட்டுத் தீர்த்தங்களில் ஆடியும் தீராமைகண்டு கவலை அதிகப்பட இருந்தாள். நகுலேச்சுரப் புதுமையைக் கேள்வியுற்று இருக்குஞ் தருணத்தில், இவளது நோயைப் பரிசோதித்த வைத்தியர்கள் சில சொற்கூறினர், அது: 'இந்நோய் கர்ம நோயல்ல; இது குஷ்டரோகம். ஆதலின் இராஜ கீரிகள் குளிக்கும் குட்டைக்குப் போய் ஸ்நானஞ் செய்து, அந்நீரையும் பருகினால் மாறும் என்பதே இதனால் கீரிகட்குப் பளையா (குகை) யுள்ள கீரிப்பளைக்கு (இதுவே கீரிமலையாக மாறலாம். ஏனெனில்: மாவிட்டபுரத்தின் வடக்குள்ள எல்லை பளை எனப் பெயர் பூண்டமை யோசிக்கற்பாலதாதலின்)

வந்து பரிவாரங்களுடன் பாளையமடித்துத் தங்கினுள். அவள் தங்கிய இடம் 'இன்று குமாரத்திபள்ளம்' என்ற பெயருடன் திகழ்கிறது.

பின் ஆங்கிருந்து கீரிப்பளை வரை, தனது தேகம் பிறர் பார்க்க முடியாது விகாரப்பட்டிருத்தலின்-பிறரறியாதவாறே போக நினைந்து ஓர் சுரங்கம் வெட்டுவித்து அதன் வழியே சென்று தீர்த்தமாடி வருவாளாயினள். சில நாட்செல்ல குட்டம் நீங்கிப் பேரழகோடு விளங்கினள். இதனுல் அவ்விடத்துக்கு மாசுட்டபுரம்-இதுவே மாவிட்டபுரமாக மாறியதுபோலும்-எனும் பெயருண்டாயது அப்பெயர் மாவிட்டபுரம் என மாறியதற்கேற்ப அவளது நோயையும் குதிரைமுகம் 'என்றியைத்துக் கதை கூறுவர். இவற்றில் எது உண்மையென ஆராய்ச்சி வல்லுநரின் அறிவிப்புலனுக்கு உணவாக விட்டு விடுகிறேம்.

இவ்வரசகுமாரியை விவாகஞ்செய்த-கதிரமலே அரசன் உக்கிரசிங்கன் இவளது வேண்டுகோட்கியைந்து, மாவிட்டபுரத்தில் ஓராலயம் ஆக்கி, கந்தன் சிலேயை இந்தியாவிலிருந்தெடுப்பித்துப் பிரதிட்டைசெய்து, நித்தியநைமித்திகங்களேக் குறைவற நடாத்தினன். உற்சவ காலத்திறுதியில் - ஆடி அமாவாசையன்று, அக்கோயிலில் எழுந்தருளியுள்ள சுப்பிரமணியப் பெருமான் உலாப்போந்து கீரிமலேக் கடலில் தீர்த்தமாடுதல் இன்றும் பெருவழக்காம். காங்கேயன் எனும் மறுநாமங்கொண்ட கந்தர் விக்கிரகம் வந்திறங்கிய துறைமுகத்துக்கு முன் காயாத்துறை எனப் பெயர் வழங்கப்பட்டது. பின் காங்கேசன் துறை எனப்பெயர் மாறியது. அப் பெண் தீர்த்தமாட வந்து போன வழியாகிய சுரங்கம் இப்போது இடையே தகர்ந்து பெயர்கிறது அப்படிப் பெயர்ந்துள்ள சில இடங்களில் (சுரங்கப் பளேகளுள்) இப்போது சில குற்றவாளிகள் சென்று மறைந்துறைவதுமுண்டு.

# இடைக்காலம்

பண்டைய திருத்தம்பலேச்சுரத்தில் குடியேறியிருந்த மக்கள் பெரும்பாலும் தபஸ்விகளேயாவர். அவர்களே பின் தபசி-தவசி என்று வழங்கப்பட்டு வந்து இப்போது பண்டாரங்கள் எனப்படுகின்றனர். தம்பலேச்சுரம் தலம், மூர்த்தி, தீர்த்தம் எனும் மூன்றுலும் விசேஷித்திருந்தமையின் இந்து சமயத்தவர்க்குச் சிறந்த பிதிர்க்கடன் கழிக்குமிடமாயமைந்தது. அப்பிதிர்க் கடன்களை இயற்றுங் குருமாராகவே அப்பண்டாரங்கள் இருந்தனர். இன்று வேதாரணியம் பண்டாரங்களே (சைவக்குருமாரெனப்படுவோர்) சைவ சமயத்தவரின் அந்தியேட்டி முதலிய பிதிர்க்கடன்களைப் புரிகின்றனர். தம்பலையானது த வஞ் செ ய் யு ம் தபஸ்விகளுக்குச் சிறந்த குகைகளை யுள்ள இடமாகவும் இருந்தது. ஆதலின் தவசிகளாகிய பண்டாரங்களே அங்கிருந்தனர் என்பதற்கையமில்லை.

தவசிகளெனப்படுவோர் யாரெனில் வீரசைவரே. இன்றும் கீரிமலைக் காணிகளின் பெயர், கி. பி. 1820, 1822வரை தோம்புகளில் 'உருப்பிலிங்கப் பதராயன் புதுக்காடு' எனவும், 'வண்ணார்பண்ணை — தமிழ்த்தவசி – வடமலைமுத்தன் தோம்பு' எனவும், 'வேலன் தவசிபுரை' எனவும், 'வீரபத்திரன் பேரில் தோம்பு' எனவும் காணப்படுகின்றன. ஆனமையின் ஞான பொக்கிஷத்தையுடைய பண்டாரங்கள்—தவசிகள் ஆச்சிரமமமைத்து, பிதிர்க்கடன்களை இயற்றுங் குருமாராயும், தவஞ்செய்வோராயும் வாழ்ந்தனர்.

பின்னர் மலையடியிலிருந்த இவர்கள் காலஞ் செல்லச் செல்ல தற்போதைய இடத்தில் வந்து குடியேறினர். ஆயின்

ஒழுக்கங்கெட்டு யோக்கியதை குறைந்துபோனமையின் மதிப்பிழந்தனர். இன்று பேருக்கு ஒரு தவசியாயினும் ஆங்கில்லை. ஆதலின் பிராமணக் குருமாரும், வேதாரணியத்துப் பண்டாரங்களும் இங்கு வந்து பிதிர்க்கடனியற்றுவர்.

பிராணுபானன் சேர்க்கையிடத்துண்டாம் சோதியே பிராணலிங்கம். அதனையுடையாளமாக வெளியேதரிப்பதே இஷ்டலிங்கம். இதனைப்பாவனை செய்வதே பாவலிங்கம். இம்மூன்று தன்மையுமுள்ள அத்தபஸ்விகள் வீரசைவரென்பதற் கோரெட்டுணையும் ஐயமில்லை.

## தற்காலம்

பண்டைய திருத்தம்பலேச்சுரச் சிவாலயம் அழிந்தபின் ஆங்குள்ள சிவலிங்கப் பெருமானை ஓர் அன்பர் பூசித்துத் தற்போதுள்ள சிவாலய நிலையத்துச் சிறு கூரைவீட்டுக் கோயிலில் எழுந்தருளச் செய்தார். பின்னரே நாவலர் பெருமான் ஆகிய அந்தண சிகாமணி அவர்களின் இடை விடா முயற்சியினால் திருப்பணிவேலை நடைபெற்றுப் பிரதிஷ்டையுமாயிற்று. நகுலேச்சுரம் என்னும் பெயரும் வழங்கலாயிற்று. இவ்வாலயமே கீரிமலையிலுள்ள பிரதான சிவாலயமாகும். இதைவிட இன்னும் பல கோயில்களும் உள. அவை யாவன கடற்கரைச் சித்திவிநாயகப் பிள்ளையார்கோயில், மாரியம்மன் கோயில், குழந்தைவேற்சமாதிச் சிவலாயம், வீரசைவ குமாரசுவாமிக்குருக்கள் சமாதி, சுப்பிரமணியராலயம்,

---

அந்தணர்-சிவபக்தர், சங்கமர், சைவமுனிவர்களை, இவ்வாலயம் பிரஹ்ம ஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் இக்கோவில் திருப்பணியைச் செய்து நிறைவேற்றுவதற்குமுன் இறந்தமையால் கும்பாபிஷேகம் நடைபெறுமலிருக்கின்றது.

காசி விசுவநாதன் கோயில் (சந்தியில்) என்பனவும், பழைப மலையின்மேல் சடையம்மா சமாதி, சங்கரசுப்பையர் சமாதி என்பவற்றின்மேலுள்ள சிவலாயங்கள், வடிவேலு மேஸ்திரியார் கட்டிய விஷ்ணுகோயில், எல்லோரும் சாதிவித்தியாசமின்றிச் சென்று பூசிக்கத்தக்க — வடிவேலு மேஸ்திரியாரே காசியிலிருந்து எடுப்பித்துப் பிரதிட்டை செய்த சிவாலயம், கதிரைமலையாண்டவர்கோயில் எனபனவுமாகும் கிரிமலையிற் தடுக்கி விழுந்தால் கோயில்களின் மேலேயே விழ நேரிடும். கிரிமலையோ பரப்பளவிற் சிறியது, ஆலயங்களாற்பெருகியத.

இங்கு வரும் யாத்திரீகரும், நோயாளிகளும், அநாதைகளும், பிதிர்க்கடனாற்றுவோரும், தங்குவதற்கேற்ற வசதிகளுள்ள பலமடங்களைப் பலபுண்ணியவான்கள் கட்டியுளர். சிருப்பர்மடம், வைத்தியலிங்கம்மடம், கிருஷ்ணபிள்ளை மடம், பிள்ளையார்கோயில் மடம், நாராயணபூதர் புண்ணிய தருமமடம், துறவிகளாச்சிரமம் என்பன அம்மடங்கள். இவைகள் எல்லாவற்றுண் மிகச் சிறந்ததும், உள்ளே விநாயகராலயத்தை உடையதும், வருடந்தோறும் கந்தபுராண படனஞ் சிறப்புற நடைபெறுவதும், மிக விசாலமானதும், தங்குவதற்குப் பல வசதிகளுள்ளதும், அழகிய சிற்பவேலைப் பாடுள்ளதுமாய மடம் சிருப்பர் மடமே.

இங்கே பல செல்வர்களும், உத்தியோகத்தரும் அநேக மாளிகைகளைக் கடற்கரையே கட்டியுளர். இதன் சுவாத்தியம் க்ஷயம், வாதம், குஷ்டம் முதலிய நோய்களை நீக்கக்கூடியதாதலின் பல நோயாளிகளும், செல்வர்களும் இங்கே வந்து

---

பிராமணர் - வருணச்சிரமத் துயர்ந்த பிதிர்த்தேவர்கள். வீரசைவர்-(ஆச்சிரம) சைவத்துயர்ந்த மகாருத்திரர், பண்டாரங்களின் குரு.

வசிப்பர். இவர்களையன்றி சில பிராமணக் குடிகளும், வீரசைவக் குடிகளும், பல பண்டாரக் குடிகளும் மற்றையோரும உறைறவர்.

இவ்வீரசைவர்களது ஆதிக்கத்திலேயே கடற்கரைப் பிள்ளையார் கோயிலும், கேணிக்குத் தெற்கே யுள்ள மடமும், பிதிர்க் கடனியற்றுவோர் கிரியை புரியும் அந்தியேட்டி மடமும் அமைநதுள. இவற்றுள் விநாயகராலயம் இப்போது திருப்பணிவேலை நடைபெறுகிறது. சைவ மெய்யன்பர்கள் அதற்குத் தங்களாலியன்ற உதவிபுரிந்து ஊக்குவிப்பார்களாக.

கேணிக்குத் தெற்கேயுள்ள மடத்திலே எங்கள் 'நகுலேஸ்வர ஜனசமூக நிலையம்' அமைந்துள்ளது. யாத்திரீகர்களுக்கும், ஆண்டுறைவார்க்கும் இன்பம் பயக்க இனிய புதினப் பத்திரிகைகள் வரும். அரசாங்கத்தில் இந்நிலையம் பதியப்பெற்று வருடா வருடம் அரசாங்க உதவியும், ஓர் 'ரேடியோவும்' பெற்றுள்ளது. ஆடியமாவாசை, மாசிமகம், சிவராத்திரி முதலிய புண்ணிய தீர்த்த நேரங்களில் யாத்திரிகருக்குப் பல தொண்டுகளும் புரிகிறது.

தபாற்கந்தோர் வசதியில்லாமற் பல்லாண்டுகளாக இடர்ப்பட்ட கீரிமலை இன்று சகல (டெலிபோன் முதலிய) வசதிகளுமமைந்த ஓர் தபாற்கந்தோரையும் பெற்றுள்ளது. ஈங்குள்ளார்க்கு ஒரேயொரு குறை: சைவப்பாடசாலையொன்றில்லாமையேயாம். அதுவும் நிறைவேறும் காலம் சமீபித்துவிட்டதென அறிந்து மகிழ்ச்சி யடைகின்றோம். நகுலேச்சுராலயத்துக்கு மேற்கே நாவலர் குழுஉவால் நடாத்திய ஓர் பாடசாலை இடிந்தழிந்து இன்று நடைபெறுது

க்ஷீணதசையடைந்துள்ளது. இதனைப் புதுக்கி, பாலரின் ஞானக்கண்ணைத் திறப்பதற்கு ஓர் புண்ணியவான் எம் சைவர்களிடையே இல்லையா? கட்டாயம் இருப்பார். அவர் இப்புண்ணிய கைங்கரியத்திலீடுபடுவாராக.

மாலை நேரம். மனமகிழ்ச்சிக்குரிய காலம். சந்திரன் வானத்தே பவனிவரும் காலம். சூரியன் பகலெல்லாம் வீசிய வெப்பந்தணியக் கடல் புகும் அமையம். கடற்கரை-வெண்மணல்-சென்னைக் கடற்கரையோ அன்றி றையோடி ஜனறேச்சமுத்திர ஓரமோ என ஐயுறும் மணற்பரப்பு- இப்படியான இடம் எதுவெனில் கீரிமலைக் கடற்கரையே. அகமயக்கும் அரிவை நல்லாரோடும், உற்றுழியுதவும் நண்பரோடும், சிற்றிடை விட்டயரும் மக்கட் சுற்றமுடனும் கடற்கரைக் காட்சியைக் கண்டு களிக்கப்பெறின்-ஆங்குள்ள தீர்த்தமாடப்பெறின்-நகுலேச்சுரப் பெருமான் திவ்விய தரிசனங் கிடைக்கப்பெறின் நகுலேஸ்வர ஜனசமுக நிலையத்து ரேடியோக் கீதங் கேட்கப்பெறின் - மக்கட்பிறப்புப் பெற்றதனாலாய பேறெல்லாம் பெற்றதன்றோ. நகுலேஸ்வரப் பெருமான் நல்லருள் பொழிக-நாடுசெழிக்க-மன்னவன் வாழ்க-மதிமுகில் பொழிக-மறைகளோங்குக-சைவந்தழைக்குக-சன்மார்க்கர் வாழ்க! வாழ்க!!

சுபம்.

ropriate Technology Services
21, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Appropriate Technology Service
121, POINT-PEDRO ROAD
NALLUR, JA
No



விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம். 52-538